பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 02 புதன்கிழமை 16.06.2021 கதிர் 223

### இனிது ரகசியம் அல்ல!

'ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்...!' என்பார்கள். இந்தப் பெண் என்ற இடத்தில் 'ஊடகவியலாளன்' என்றும் போடலாம். சில சமயங்களில் நமது வேலையும் அப்படித்தானாகி விடுகின்றது.

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' -

02



# தெற்கில் கிளம்பிய கடும் எதிர்ப்பால் கோட்டா - கூட்டமைப்பு பேச்சு இரத்து!

இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று மாலை நடக்கவிருந்த நேரடிப் பேச்சு கடைசி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுப் பற்றிய விவரம் வெளிவந்ததால் தெற்கில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அழுத்தத்தையடுத்தே அவர் பேச்சை இப்போதைக்குத் தள்ளிப்போடும் முடிவை எடுத்திருக்கின்றார் எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பேச்சுக்கான திகதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை அறிவித்துள்ளது எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 4 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெறவிருந்தது.

02

## மேலும் 55 பேர் பலியெடுப்பு

### கொரோனா காவு 2,315

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

33 ஆண்களும், 22 பெண்களும் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களில் 11 பேர்

02

## 2,275 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 275 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில்த் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 28 ஆயிரத்து

02

# சுவீகரிக்கும் காணிகளை அளவிட இராணுவ நில அளவையாளர்கள்!

### நேற்று மருதங்கேணிப் பகுதியில் நேரடியாகக் களத்தில் குதித்தனர்



இராணுவம் நேற்று நாட்டிய கூனிக் கட்டை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன்16

படைத் தரப்பு சுவீகரிக்க முயலும் பொதுமக்களின் காணிகளை நில அளவைத் திணைக்களம் மூலம் அளவிட முன்யறால், அது பற்றிய தகவல் பொதுமக்களை எட்டி, அவர்கள் அரசியல்வாதிகளுடன் திரண்டு வந்து, அதைத் தடுக்கின்றார்கள் என்பதால், இதனைத் தவிர்ப்பதற்காக, இராணுவமே தனது பொறியியல் படைப் பிரிவின் கீழ் தகுதி பெற்ற நில அளவையாளர்களைக் கொண்ட ஓர் இராணுவப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது.

02

## ஜனாதிபதி செயலாளரை உடனே பதவி நீக்குங்கள்!

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் வலியுறுத்து



ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தரவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்பு அபயாராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

02

## முல்லைத்தீவில் நேற்று குண்டு வெடிப்பு; வயோதிபப் பெண் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வயோதிபப் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணியில் இருந்த குப்பைகளைக் கூட்டி நெருப்பு வைத்த போது அதிலிருந்த குண்டு வெடித்ததில் குறித்த பெண் காயமடைந்துள்ளார்.

அம்மன் கோயில் வீதி, 5 ஆம் வட்டாரம் , இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்துவரும் 64 வயதுடைய இந்திரன் மரியரெத்தினம் எனும் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு

02

### கொரோனாத் தொற்றால்

## யாழ். போதனாவில் ஐந்து பேர் மரணம்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 5 கொரோனா நோயாளிகள் நேற்றிரவு 9 மணிவரையான 24 மணிநேரத்தில் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வரும், திருகோணமலையைச் சேர்ந்த

02

Maligai.lk doorstep grocer

பயணக்கட்டுப்பாடா? கவலை வேண்டாம்...






உங்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் பலசரக்குப் பொருட்களை www.maligai.lk இல் அல்லது 0703123456 இல் ஓடர் செய்து வீட்டிற்கே பெற்றிடுங்கள்!

We are operating during Travel restrictions to serve your home needs. Place your orders on www.maligai.lk or 0703123456 and stay safe.

Shop now on www.maligai.lk

Call & Order 0703123456

## இனி இது ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற வேலை மாதிரி ஒரு விடயத்தைக் கெடுத்து விட்டேனோ என்று நெஞ்சு குறுகுறுக்கின்றது. அதை ஒட்டிய சில நினைவுப் பதிவுகள் இன்று.

கோட்டா பதவியேற்று ஒன்றரை வருடங்களாகக் கூட்டமைப்புடன் - தமிழர் தரப்புடன் - இனப் பிரச்சினைக்கான சமரசத் தீர்வு தொடர்பில் எந்தப் பேச்சையும் ஆரம்பிக்கவில்லை. காலம் இழுபட்டது.

ஆக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மட்டும் தமிழர் தரப்புடன் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவ்வப்போது பிரதிபலித்து வந்தார். என்னிடம் சில, பல தடவைகள் நேரில் அவரே அதைக் கூறியிருந்தார். கோட்டாவை அப்படி ஒரு வழியில் உந்தித் தள்ளும் எண்ணம் தமையனார் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொடர்ந்து இருந்து வந்தது.

இந்தப் பின்புலத்தில்தான் தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தும் அழைப்பு கோட்டாபய தரப்பில் இருந்து சம்பந்தனுக்கு வந்தது. ஒரு நிபந்தனையுடன்.

16ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு. ஆனால் சந்திப்பு நடைபெறும் வரை வெளியில் அது குறித்து மூச்சும் விடக்கூடாது என்பதுதான் நிபந்தனை.

சம்பந்தன் விடயத்தை மாவை, சுமந்திரன், செல்வம், சித்தார்த்தன் ஆகிய நால்வருக்கும் கடந்த 8ஆம் திகதியே தெரிவித்து விட்டார். வெளியே மூச்சு விடக்கூடாது என்ற கடுமையான கண்டிப்புடன்.

தெரிந்தோ, தெரியாமலோ அரசுத் தரப்பு வட்டாரம் ஒன்று நேற்று முன்தினம் காலையில் எனக்கு பேச்சு நடக்கவிருக்கும் தகவலை அடித்துக் கூற நான் அது குறித்து நேரடியாகக் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டேன். அவர் மழுப்பினாரே தவிர பதில் தரவில்லை. தான் எங்கோ பயணித்துக் கொண்டிருக்கிறார் என்றும், பிறகு பேசுவார் என்றும் கூறிய சுமந்திரன், அதற்குப் பிறகு அன்றைய தினமும் நேற்றுக் காலை வரையிலும் மிஸ்லிங். தொலைபேசி அழைப்புக்கு அவர் வரவேயில்லை.

பொறுத்துப் பார்த்த நான் வேறு வழியின்றி நேற்று இப்பத்தியில் விடயத்தை அவிழ்த்து விட்டேன். வாசகர்களுக்கு அது நினைவிருக்கும். அவ்வளவுதான். விடிகாலையில் 'காலைக்கதிர்' வெளியானதும் எல்லோரும் சுமந்திரனைத் தொடர்பு கொண்டு நோண்டத் தொடங்க, வேறு வழியின்றி விடயத்தை ஒப்புக் கொள்ள வேண்டியவரானார் அவர்.

ஆனாலும் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி மட்டுமே பேசுவோம், பொறுப்புக்கூறல் குறித்து எதுவும் கேட்க மாட்டோம், அதனை ஜெனிவா தேசம் பார்த்துக் கொள்ளட்டும், என்றெல்லாம் சில 'சுமாளிபிகேஷன்' அறிவிப்புக்களையும் அவர் சேர்த்து விடுத்தார்.

ஆனால், விடயம் பலனளிக்கவில்லை.

உத்தேச பேச்சுப் பற்றிய விடயம் வெளியே அம்பலமாகி, நெருக்குதல் அதிகரித்து விட்டது. அதனால் பேச்சைத் தள்ளிப் போடுமாறு ஜனாதிபதி பணித்து விட்டார் என்ற தகவல் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் நேற்றிரவு ஏழு மணி போல ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பேச்சுப் பற்றிய செய்தியை எனது வாசகர்களுக்கு நேரத்துடன் வழங்க வேண்டும் என்ற எனது அவா, கடைசியில் பேச்சு முயற்சிக்கே ஆப்பு வைத்து விட்ட விபரீதமாயிற்று. நினையாப் பிரகாரமாக நடந்த விவகாரம். எதிர்பாராத திருப்பம்.

ஆனாலும் பேச்சுப் பற்றிய செய்தி முதலில் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு கூட்டமைப்புத் தரப்பால் கசியவில்லை, ஜனாதிபதி அலுவலகப் பக்கத்தில் இருந்துதான் - தெற்கில் இருந்துதான் - 'லீக்' ஆகியிருக்கின்றது எனக் கூட்டமைப்புத் தரப்பு ஜனாதிபதி அலுவலகத்துக்குத் தெரிவித்திருப்பதாகவும் அறிய வந்தது.

இது குறித்து எழுதும் போது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த காலத்தில் - 2006 நடுப்பகுதியில் - நடைபெற்ற ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. இந்த விடயத்தை 2006 ஜூன் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தனது 'த சண்டே லீடர்' பத்திரிகையில் முழு விவரமாக ஒரு பக்கக் கட்டுரையில் அம்பலப்படுத்தியிருந்தார் பின்னாளில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க. அதன் சுருக்கத்தை நான் இங்கு தருகிறேன்.

அப்போது விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இரண்டு தரப்புக்கும் நன்கு பரிச்சயமானவன் என்ற வகையில் உத்தியோகபற்றற்ற சமாதானத் தூதுவனாக - இன்னொரு வகையில் சொல்வதானால் தபால்காரனாக - பணியாற்றும் பொறுப்புக் கிட்டியது.

அந்த ஞாயிற்றுக்கு முந்திய செவ்வாய்க்கிழமை அலரி மாளிகைக்கு என்னை அழைத்தார் மஹிந்தர்.

"புலிகளும், படைகளும் பெரும் மோதலுக்கு தம்பாட்டில் தயாராகி நிற்கின்றார்கள். நீயும் நானும் மக்களும்தான் இடையில் அகப்படப் போகின்றோம். ஏற்படக் கூடிய விபரீதங்களை நாம் நேரடியாகப் பேசி தவிர்த்தால் என்ன? ஏன் நோர்வே, அவர்கள், இவர்கள் என்று இடைத்தரகர்கள்? நேரடியாகப் பேசினால் என்ன?" - என்ற சாரத்தில் பேசிய மஹிந்தர் பல மேலோட்டமான விட்டுக் கொடுப்புகள் பற்றி பிரஸ்தாபித்தார்.

நான் அந்தச் செய்யுடன் வன்னி விரைந்தேன். அந்தத் தடவை குறுகிய நேரத்தில் தமிழ்ச்செல்வனுடன் மட்டும்தான் சுமார் மூன்று மணி நேரம் பேச முடிந்தது. தலைவர் பிரபாகரனின் பதிலையும் அவரே எடுத்து வந்து கிளிநொச்சியில் எனக்குத் தெரியப்படுத்தினார்.

நான் கொழும்பு மீண்டேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுதலைப் புலிகளின் தலைமையின் பதிலை எடுத்துரைத்தேன்.

"இரகசியமாக ஏன் பேச வேண்டும்? நோர்வேயை ஒதுக்கி விட்டு நேரடியாகப் பேச வேண்டும் என்றால் - அதற்குத் தைரியம் இருந்தால் - பகிரங்கமாக அறிவித்து விட்டு வாருங்கள். நேரடியாக மனம் திறந்து பேசுவோம் - என்ற பதிலை உங்களிடம் சொல்லச் சொன்னார் தமிழ்ச் செல்வன். இதுதான் தலைவர் பிரபாகரனின் பதில் என்றும் குறிப்பிட்டுச் சொன்னார்." - என்ற தகவலை மஹிந்தரிடம் தெரிவித்தேன்.

இந்த விடயங்கள் பற்றிய முழு விவரமான செய்தியை 2006 ஜூன் 25 ஆம் திகதி இதழில் முன்பக்கத் தலைப்புச் செய்தியாகவும் தனது அரசியல் கட்டுரையில் (INSIDE POLITICS with SURANIMALA) ஒரு பக்கம் முழுவதிலும் 'President seeks secret pact with LTTE in the face of imminent war - Editor and Publisher of UTHAYAN newspaper asked to carry proposal to LTTE bypassing Norway' என்ற தலைப்பிலும் 'த சண்டே லீடர்' வெளியிட்டிருந்தது. அதன் ஒரு பிரதி என்னிடம் இப்போதும் உள்ளது. (தேவையானால் மின்னியல் வடிவத்தில் அதனைப் பார்வையிடலாம்.)

விடயம் அதுவல்ல. இரகசிய பேச்சை - பின் கதவால் சமரசம் செய்வதை - அன்றே விடுதலைப் புலிகள் எதிர்த்திருந்தனர்.

இன்றைய தலைவர்களுக்கு அந்தத் தகவல் சமர்ப்பணம்.

- மின்னல் -

## சுவீகரிக்கும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பிரிவு நேற்று மருதங்கேணியில் களத்தில் இறங்கி இராணுவ முகாம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியில் சத்தம் சந்தடியின்றி அளவீட்டுப் பணிகளை முன்னெடுத்தது.

நில அளவைத் திணைக்களத்தின் பங்குபற்றுதலின்றி இராணுவத்தினரின் அளவீட்டுப் பிரிவினர் மூலம் காதும் காதும் வைத்தால் போல இந்த அளவீட்டுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

மருதங்கேணி மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயம் அருகே உள்ள இராணுவத்தினர் அயலில் உள்ள தனியார் நிலத்திலும் நேற்று அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு கூனிக் கட்டைகளை (குறியீட்டுக் கட்டைகளை) இறுக்கியுள்ளனர். தமது தனியார் நிலங்களையும் சேர்த்து அபகரித்து சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் இரகசியத் திட்டத்தின் முன்னேற்பாடாக இந்நடவடிக்கை இருக்கலாம் என காணி உரிமையாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள படையினர் தற்போது 300 ஏக்கர் வரையான நிலத்தையே ஆக்கிரமித்துள்ளனர். இருந்த போதிலும் அதையும் சேர்த்து 700 ஏக்கர் காணிகளை முன்பும் படையினர் சுவீகரிக்க கக்கோரியபோது தனியாரால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதனால் அப்பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது. இப்போது அங்கு இராணுவத்தினரின் நில அளவையாளர்களைக் கொண்ட பிரிவு காணி அளவீட்டை ஆரம்பித்துள்ளது.

பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்திற்கு எந்தத் தகவலும் முன்கூட்டியே தெரியப்படுத்தப்படாமலேயே இவ்வாறு இரகசியமாக படையினர் மூலம் நிலம் அளக்கப்பட்டுள்ளது. இந்த அளவீட்டுப் பணியுடன் நில அளவைத் திணைக்களத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 2,275 பேருக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
197ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 478 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 404 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ். போதனாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அரியாலையைச் சேர்ந்த 89 வயதுடைய ஆண் ஒருவரும், புத்தூரைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவரும், பலாலியைச் சேர்ந்த 59 வயதுடைய ஆண் ஒருவரும், கோப்பாயைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, திருகோணமலை, புல்மோட்டையைச் சேர்ந்த 58 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 62 ஆக உயர்வடைந்துள்ளது.

## ஜனாதிபதி செயலா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களின் ஆதரவைக் குறுகிய காலப்பகுதியில் இழந்த அரசாக கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசே காணப்படுகின்றது. ஜனாதிபதிக்கு இந்த நிலைமை ஏற்படுவதற்கு பிபி ஜயசுந்தர தான் காரணம். எனவே, அவரை அப்பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பாரிய எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

மக்களின் மனம் அறிந்த ஒருவரை அப்பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

## தெற்கில் கிளம்பிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்கவிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி செயலகம் கடந்த 8ஆம் திகதியே கூட்டமைப்பினருக்கு அனுப்பியிருந்தது எனவும், ஆனால் கூட்டமைப்பினர் இந்தத் தகவலை வெளியில் கசியவிடாது மறைத்து வைத்திருந்தனர் எனவும் அறிய முடிந்தது.

இதேவேளை, புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாட இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினரை இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார் என்று சந்திப்பு இரத்து என்ற தகவல் நேற்று மாலை வருவதற்கு முன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசமாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் 55 பேர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். 44 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 315 ஆக அதிகரித்துள்ளது.

## முல்லைத்தீவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

## எரிபொருள் விலை அதிகரிப்பு எமது அரசின் தீர்மானமாகும்

### சாகரவுக்கு மஹிந்த நெத்தியடி



எரிபொருள் விலை அதிகரிப்பு, ஜனாதிபதி தலைமையிலான எமது அரசின் தீர்மானமாகும். இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகுமாறு கோருகின்றமை வேடிக்கையானது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி, நான் மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் கூடியே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான முடிவை எடுத்தோம். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் நான் பூரண அனுமதியை வழங்கினேன்.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மட்டும் தனித்திருந்து எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுக்கவில்லை. இந்தத் தீர்மானத்தை உதய கம்மன்பிலவை உள்ளடக்கிய வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே எடுத்தது.

இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகக் கோருகின்றமை வேடிக்கையானது. அமைச்சரவைப் பதவி விலகுமாறு கோருவதன் உள்நோக்கம் தொடர்பில் ஆராய்வேன். பிரச்சினையை ஊதிப் பெருக்குவது எமது அரசின் நோக்கம் அல்ல.

எனினும், இந்த விவகாரம் தொடர்பில் எதிரணியினர் வாய்க்கு வந்த மாதிரி விமர்சனக் கருத்துக்களை வெளியிடுகின்றமைதான் மேலும் வேடிக்கையாக இருக்கின்றது. - என்றார்.

# ஜனாதிபதியின் உத்தரவால் அச்சத்தில் பல அதிகாரிகள்

### பதவி பறிபோகும் அபாயம்



வேலை செய்யாத அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலருக்கு பதவி இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சுக்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அக்கறை செலுத்தாமல், ஆதரவு வழங்காமல் இருக்கும் அமைச்சின் செயலாளர்கள், பதில் செயலாளர்கள், நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் இயக்குநர்களை உடனடியாக பதவி நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பிரதானிகள் பலர் பயணக்கட்டுப்பாட்டைப் பயன்படுத்தி வீட்டில் இருப்பதோடு எவ்வித கடமைகளையும் செய்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அரசாங்கத்தின் அனைத்து கொடுப்பனவுகளையும் குறைவின்றிப் பெற்றுக் கொள்வதாக அமைச்சர்கள் பலர் செய்த முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நியமனங்கள் தன்னால் மேற்கொள்ளப்பட்டவைகள் என்றாலும், நாடு மற்றும் அமைச்சுக்களின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் செயற்படாத அனைத்து அதிகாரிகளினதும் தகவல்களை தங்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அனைத்து அதிகாரிகளும் எவ்வளவு நெருக்கமானவர்கள் என்றாலும் அதற்கான வேறு தகுதியான நபர்களை நியமிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என அரச தகவல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகி உள்ளது.

## குறைந்த வருமானம் கொண்ட அனைத்து குடும்பத்துக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கல்



சமுர்த்தி உதவிக்கு மேலதிகமாக குறைந்த வருமானம் கொண்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்காக கடந்த திங்கட்கிழமை கூடிய அமைச்சரவை கூட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

திங்கள் மாலை ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றுள்ளது.

சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அமைச்சரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, எரிபொருள் விலை அதிகரித்த போதிலும் பஸ் கட்டணத்தை அதிகரிக்க எந்த முடிவும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பல்பொருள் அங்காடி நிலையங்களில் மதுபானம் விற்பதற்கு அனுமதியில்லை

பல்பொருள் அங்காடிகளில் ஒன்லைன் விநியோக சேவை மூலம் மதுபானங்களை விற்க அனுமதி வழங்கப்படவில்லை என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா நிலைமை காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடைக்கு ஏற்ப மது விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பல்பொருள் அங்காடிகளில், ஒன்லைன் விநியோக சேவை மூலம் மதுபானங்களை விற்பனை செய்ய கலால் திணைக்களம் அனுமதி அளித்ததாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

பொதுமக்கள் தங்கள் அத்தியாவசியப் பொருள்களுடன் மதுவை வாங்கலாம் என குறித்த செய்தி தெரிவித்திருந்த நிலையிலேயே கலால் திணைக்களம் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

## இலங்கை உட்பட ஏழு நாடுகளுக்கு பிலிப்பைன்ஸ் பயணத் தடை நீடிப்பு

இலங்கை உட்பட 7 நாடுகளுக்கு, பிலிப்பைன் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு தொடர்ந்தும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரிப்புக் காரணமாக ஆரம்பத்தில் ஏப்ரல் 29 முதல் இந்தியா மீது பயணக் கட்டுப்பாடுகளை விதித்தது.

பின்னர் இலங்கை உட்பட பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த மே 7 ஆம் திகதி முதல் பயணத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனாத் தொற்று அச்ச நிலைமையை கருத்திற் கொண்டு, பிலிப்பைன் ஜனாதிபதியினால் ரோட்ரிகோ டுர்ட்டே யால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தோல்வியில் படிப்பினைகள்

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இடையில் இன்று மாலை நடைபெறவிருந்த நேரடிப் பேச்சுகள் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பேச்சுகள் நடைபெறவுள்ளன என்ற செய்திகள் நேற்று வெளியானமையை அடுத்து, அதனால் தமக்குத் தெற்கில் ஏற்பட்ட கடும் அழுத்தங்கள், நெருக்கடிகள் காரணமாக பேச்சை நடத்தாமல் தள்ளிப் போடுவதாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிக்கியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தரப்பும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எத்தகைய இக்கட்டுப் பொறியில் மாட்டி நிற்கின்றனர் என்பது நோக்கத் தக்கது; கவனிக்க வேண்டியது.

2019 நவம்பரில் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவுடன் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து நேரடிப் பேச்சு நடத்துவதற்கு தயார் என்று அப்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்புக்குச் சாதகமான பதில் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து வரும் என்று கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டமைப்பினர் காத்திருந்தனர். இப்போதுதான் வந்தது. அதுவும் எத்தகைய வழியில்?

சத்தம் சந்தடியின்றிப் பேச வாருங்கள், மூன்றாவது நபர்கள் போல கொல்லைப்புற வழியாகக் களவாக வாருங்கள், வேறு யாருக்கும் தெரியக் கூடாது, பேசி முடிந்த பின்னர் வேண்டுமானால் மக்களுக்குத் தெரியட்டும் என்று கள்ளக் காதலனுக்கு சமிக்ஞை மூலம் அழைப்பு விடுக்கின்ற மாதிரி கூப்பிட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்த அழைப்பை ஏற்று மூன்றாம் தரப்புக்குத் தெரியாமல் களவாக ஆயத்தப்படுத்தி, பேச்சுக்குப் போகும் நிலைமை கூட்டமைப்பினருக்கு.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும், தமிழர்களின் வாக்குகள் எனக்கு விழாவிட்டாலும் – பௌத்த, சிங்களவர்களின் வாக்குகள் மட்டுமே எனக்கு விழுந்திருந்தாலும் – நான் முழு இலங்கைக்கும் ஜனாதிபதி, தமிழர்களுக்கும் நானே ஜனாதிபதி என்று இறுமாப்புடன் உரைத்தவர் கோட்டாபய ராஜபக்ஷ.

ஆனால், தமிழர்களுக்கும் சேர்ந்து நானே ஜனாதிபதி என்று உரைத்த கோட்டாபய ராஜபக்ஷவினால் அதே தமிழர்களின் பிரதிநிதிகளுடன் பகிரங்கமாக – வெளிப்படையாக – பேசமுடியாத இக்கட்டு. ஒளித்து, மறைத்து பின்கதவால் சமரசம் செய்ய முயலும் சிக்கல்.

அவ்வளவு தூரம் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் பிடிக்குள் சிக்கிக் கட்டுண்டு கிடக்கின்றார் கோட்டாபய.

தமிழர் பிரதிநிதிகளுடன் தாம் சமரசம் செய்ய முயலப் போகின்றார் என்ற செய்தி வெளியானதுமே, அதனால் தமது பௌத்த, சிங்களப் பேரினவாத அணியில் ஏற்படக் கூடிய எதிர்வினைகளைப் புரிந்து கொண்டு முன்னெச்சரிக்கை ஏற்பாடாக பேச்சிலிருந்தே நழுவ வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு.

எத்தகைய பேரினவாதப் பிடிக்குள் இன்று கோட்டாபய சிக்கிக் கொண்டு பரிதவிக்கின்றார் என்பது இந்தப் பேச்சுகள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்படும் நிலைமையிலிருந்து நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பேச்சு முயற்சியின் கோலத்தை கண்டுணர்ந்ததன் மூலம் கூட்டமைப்பு இரண்டு விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

ஒன்று – இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் தாம் பேச்சு நடத்துவதை முற்கூட்டியே தமது, பௌத்த சிங்களத் தரப்புகள் அறிந்தால், குழம்பி விடும் என்று கருதி, அதை மறைக்க முயலுகிறார் ஜனாதிபதி. அத்தகையவருடன் பேசி, தமிழருக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை எட்டலாம், காணும் தீர்வை எப்படியும் அவர் நடைமுறைப்படுத்துவார் என்று நம்பி அவருடன் பேசப் போகலாம் எனத் தமிழர் தரப்பு கருதுவது பேரபத்தம்.

அடுத்தது – இந்தப் பேச்சுப் பற்றிய செய்தி வெளியாகி, ஜனாதிபதிக்குத் தென்னிலங்கையில் நெருக்கடி ஏற்படலாம் என்று கருதியோ, என்னவோ நாங்கள் ஜனாதிபதியுடன் அரசமைப்பு மாற்றம் குறித்து மட்டுமே பேசுவோம், பொறுப்புக் கூறல் பற்றிப் பேசவே மாட்டோம் என்று கூறுவதுடன் கூட்டமைப்பு விவகாரத்தை நிறுத்தியிருந்தால் விடயம் வேறு. ஆனால் கூட்டமைப்போ, அதையும் தாண்டி நாம் பொறுப்புக்கூறல் பற்றி ஜனாதிபதியுடன் உரையாட மாட்டோம், ஆனால், அந்த விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட சர்வதேச சமூகம் கையாளும் என்றல்லவா அறிவித்தது?

பொறுப்புக் கூறல் விவகாரத்தைக் கூட எமது ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசித் தீர்க்காமல், சர்வதேச சமூகத்திடம் அவ்விடயத்தில் ஜனாதிபதியையும், நாட்டையும் சிக்க வைக்கும் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேசலாமா என்றுதானே இவ்விடயத்தை கோட்டாவைச் சுற்றி நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் பார்ப்பர்....?

இப்படி பல விடயங்களில் புதிய படிப்பினைகளைப் பிழைத்துப் போன இந்தப் பேச்சு முயற்சி நமக்குத் தந்து நிற்கின்றது என்பது மட்டும் உண்மை.

# பாதுகாப்பற்ற நிலையில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடலில் அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ள எம்.வி எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் இன்னும் பாதுகாப்பற்றதாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் முன் பகுதி தொடர்ந்தும் மிதந்து கொண்டிருக்கிறது என்று கப்பல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கப்பல் முற்றிலும் நிலையானதாக இருக்கும் வரை எதிர்கால நடவடிக்கை தொடர்பாக எந்த முடிவும் எடுக்க முடியாது என்று கூறியுள்ளார்கள்.

சிங்கப்பூரை தளமாகக் கொண்ட கப்பலின் உரிமையாளர்களின் செய்தித் தொடர்பாளர் எண்ட்ரூ லீஹி, தாம் இன்னும் நிலைமையைக் கண்காணித்து வருகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கப்பலின் எச்சங்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கேட்ட கேள்விக்கு பதில் வழங்கியுள்ள அவர் –

கப்பல் இன்னும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் ஒரு முடிவும் எட்டப்படவில்லை. கப்பல் உரிமையாளர்கள், ஏற்கனவே கடந்த பல நாள்களாகவே செய்து வருவதைப் போலவே காத்திருந்து பார்க்க மட்டுமே முடியும்.

இலங்கையின் இடைக்கால நட்டஈடு உரிமைகோரல் தொடர்பாகக் கருத்துரைத்த, எண்ட்ரூ லீஹி, நிறுவனத்தின் சட்டத்தரணிகள், காப்பீட்டாளர்களிடம் இது தொடர்பில் தொடர்பு கொண்டிருப்பதால், தம்மிடம் எந்தக் கருத்தும் இல்லை என்று கூறினார்.

மே 20 முதல் ஜுன் 1 வரை இலங்கைக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இலங்கை, கப்பல் உரிமையாளர்களிடமிருந்து 4 கோடி டொலர் இடைக்கால கோரிக்கையை விடுத்துள்ளது.

இதற்கிடையில், சனிக்கிழமை மாலை நிலைவரப்படி, இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படையினரும் சம்பவ இடத்தில் அவதானித்ததில் கப்பலில் இருந்து எரிபொருள் கசிவுக்கான அறிகுறிகள் எதுவும் கிடைக்கவில்லை என்று கப்பல் உரிமை நிறுவனமான எக்ஸ் பிரஸ் ஃபீடர்ஸ் தெரிவித்துள்ளது.

# கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கைக் குடும்பம் விடுவிக்கப்பட்டது



ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்க் குடும்பம் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளதாக அல்ஜசீரா செய்தி சேவை தெரிவித்துள்ளது.

எனினும் பிரியா – நடேஸ் குடும்பத்தை குயின்ஸ்லாந்தில் உள்ள அவர்களது வீட்டுக்கு மீண்டும் அனுமதிப்பதற்குப் பதிலாக, மேற்கு நகரமான பெர்த்தில் சுமார் 4 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் வாழ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரியா – நடேஸ் ஆகியோரின் புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட பின்னர், அவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த வாரம் பிரியா – நடேஸ் தம்பதியரின் இரண்டாவது மகள் தருணிகா சிகிச்சையளிக்கப்படாத நிமோனியாவின் விளைவாக உருவாகியதாகக் கருதப்படும் கடுமையான இரத்தத் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டு பெர்த் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருடன் தாயார் பிரியா மாத்திரம் பெர்த் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, தந்தையும், சகோதரி கோபிகாவும் கிறிஸ்மஸ் தீவிலேயே தங்கியிருந்த நிலையில், குறித்த குடும்பம் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பெர்த் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் அரியவகை சுறா மீண்டும் கடலில் விடப்பட்டது



திருகோணமலை குச்சவெளி கல்லராவ மீன்பிடி கிராமத்தில் வலையில் சிக்கிய அரிய வகை சுறாவை மீனவர்கள் பாதுகாப்பாக கடலுக்குள் மீண்டும் விட்டுள்ளனர். குறித்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் வளி மண்டலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் கடந்த காலங்களில் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

இந்தநிலையில் அரசாங்க மீன்பிடிக்கான அனுமதியினை வழங்கிய பின்னர், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லறாவ மீன்பிடி கிராமத்தில் வசித்து வந்தவர்கள் கரை வலை மூலம் மீன்பிடிப்பதற்காக சென்ற வேளை குறித்த மீன் வலையில் சிக்குண்ட நிலையில் அந்த அரிய வகை சுறா மீன் பாதுகாப்பாக மீண்டும் கடலுக்குள் விடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு கடற்பரப்பில் 8 மீனவர்கள் கைதாகினர்!



மட்டக்களப்பிலிருந்து அனுமதியின்றி ஆழ்கடலில் இயந்திரப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினர் வழமைபோல கடலில் சம்பவதினமான திங்கள் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமாக கடலில் இயந்திரப்படகுகள் பயணித்துள்ளமையை அவதானித்த கடற்படையினர் பின் தொடர்ந்து இயந்திர படகுகளை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மட்டக்களப்பு மாமாங்கப்பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்கள் கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து அவர்களை கைது செய்தமையுடன் அவர்களின் 3 இயந்திரப்படகுகளையும் கல்லடி கடற்படை முகாமிற்கு கொண்டுவந்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக மீன்பிடித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 22ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**211.தொலைபேசியை கண்டுபிடித்தவர் யார்?**

**212.இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?**

**213. 2019 சர்வதேச உலக கோப்பையை கைப்பற்றிய கிரிக்கெட் அணி எது?**

**214. அமெரிக்காவின் தற்போதைய துணை அதிபர் யார்?**

**215. அடிப்படைக் கணியங்கள் எத்தனை?**

**216. ஞாயிற்றுத் தொகுதியில் மிகப்பெரிய கோள் எது?**

**217.வரலாற்றின் தந்தை யார்?**

**218. உலகிலேயே மிகப்பெரிய கண்டம் எது?**

**219. இலங்கையை ஆட்சி செய்த இறுதி சிங்கள மன்னன் யார்?**

**220. ஆவர்த்தன அட்டவணையில் அயனாக்க சக்தி கூடிய மூலகம் எது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 20ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**191. ஜோ பைடன்**
**192. மஹேல ஜெயவர்த்தன**
**193. பசுபிக் சமுத்திரம்**
**194. புளோரின்**
**195. இரத்தம் கொடுத்து உலகை துடிக்க வைக்கவும்**
**196. 5 நாள்கள்**
**197. இங்கிலாந்து**
**198. புதன்**
**199. மகாசேனன்**
**200. யூன் - 14**

## 14ஆம் திகதி வெளியான 20ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

**1. கே.அனுசன் - ஏழாலை**
**2. எஸ்.ஶ்ரீஇராமசந்திரன் -வத்திராயன்**
**3. வை.அபிமாறன் - கரவெட்டி**
**4. ஏ.துஷான் - நீர்வேலி**
**5. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம்**
**6.எஸ்.வனோஜா - கொடிகாமம்**
**7.ஜெ.வினோஜன் -குடத்தனை**
**8. ஆர்.மாலதி - உடுப்பிட்டி (8சரி)**
**9.எஸ்.சதுர்ஜினி - அல்வாய் (9சரி)**

# பஸ் கட்டணம் அதிகரிக்கப்படுமா? இராஜாங்க அமைச்சர் விளக்கம்

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு ரூபாவினாலும் பஸ் கட்டணத்தை அதிகரிக்கப்போவதில்லையென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாறாக எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை பொதுமக்களுக்கு இயலுமானவரை பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு விட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பயணத் தடை காரணமாக இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்ட போது, பஸ் கட்டணத்தில் 20 வீத திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையால் இந்தத் தடவை கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# கர்ப்பிணி பெண் கிணற்றில் குதிப்பு வயிற்றிலிருந்த குழந்தை சாவு

கேகாலையில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கிணற்றில் குதித்தமையால் வயிற்றில் இருந்த குழந்தை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரம்புக்கன, பத்தம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ஶ்ரீகுமாரி என்ற 28 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளார்.

குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டில் இல்லாமையால் உறவினர்கள் அவரைத் தேட ஆரம்பித்துள்ளனர். இதன் போது அந்தப் பெண் பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து கிடந்தமையை அவதானித்துள்ளனர்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அவரது மூத்த சகோதரி தெரிவித்துள்ளார். வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டதன் பின்னர் வயிற்றில் இருந்த குழந்தை கிணற்றிலேயே பிறந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை குழந்தையை தேட நடவடிக்கை எடுக்கப்பட்டபோது குழந்தை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்யும் ஒருவர் என தெரியவந்துள்ளது. திங்கள் மாலை 3 மணியளவில் குழந்தையின் சடலம் வெளியே கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் மரணம் தொடர்பிலும் தாய் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தமை தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவி

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 78கோடி அமெரிக்க டொலர் நிதி கிடைக்கவுள்ளதாக மத்திய வங் கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் சந்திரநாத் அமர சேகர தெரிவித்தார்.

மேலும் இது ஒரு கடன் தொகை அல்ல எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர் என்ற அடிப்படையிலேயே இலங்கைக்கு இந்த நிதி கிடைக்கப்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்வரும் ஒகஸ்ட் - செப்ரெம்பர் மாதங்களில் இந்த நிதி இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்கப்படுவதாகவும் சந்திரநாத் அமரசேகர கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனொன்றைப் பெறுவதற்கு அரசாங்கம் எந்தவித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை எனவும் சந்திரநாத் அமரசேகர குறிப்பிட்டார்.

# கிளிநொச்சியில் பசு மாட்டை திருடர்கள் இறைச்சியாக்கினர்



கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட கேப்பை இன பசு மாட்டை களவாடி இறைச்சியாக்கியுள்ளனர் என மாட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வாதாரமாக வளர்க்கும் கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கும் சம்பவங்கள் சமீப காலங்களில் அதிகரித்து வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை உருத்திரபுரம் 10 ஆம் வாய்க்கால் பகுதியில் வீட்டில் கட்டிவிடப்பட்ட பால் தருகின்ற உயர் ரக பசுமாட்டி களவாடி உருத்திரபுரம் பொது மயானத்திற்கு அருகிலுள்ள பாழடைந்த கட்டடத்துக்குள் இறைச்சியாக்கி விட்டு பசுமாட்டின் தலை தோல்களை விட்டு சென்றுள்ளனர். சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு மேலான குறித்த பசு மாடு தற்சமயம் பால் தருகின்ற நிலையில் இறைச்சி ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் உரிமையாளர், அண்மைய நாள்களாக ஆடு, மாடு, கோழிகள் என்பன தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருகின்றன என கவலை தெரிவித்துள்ளனர்.




- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 37

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**122. அங்கிருந்த புலிகளின் ஆதரவாளர்கள் உங்களை எப்படி பார்த்தார்கள்?**

நான் முன் சொல்லிய மாதிரி ஒதுக்கியும் ஓரங்கட்டப்பட்டும் ஓர் இரண்டு கெட்டான் நிலையில் இருந்தேன். ஆனால் இருந்த சற்று ஆளுமையில் செய்ய வேண்டியவற்றை - சொல்ல வேண்டியவற்றை - சொல்லிக் கொண்டிருந்தேன். ஒரு தவறான பாதையில் கூட்டத்தோடு கூட்டமாக செல்வதை விட, சரியான பாதையில் தனியாகவே செல்ல வேண்டும் என்றால் மனசாட்சிப்படி அதனை செய்யுங்கள் என்றுதான் அறிந்திருந்தேன். என் மனதில் சரி என்று பட்டதை செய்தேன். நேரடியாக இல்லாவிட்டாலும் பிரபாகரனுடனும் சில அறிந்த தளபதிகளுடனும் மற்றவர்கள் ஊடாகத் தொடர்புகள் நிலைத்தன. எதை இங்கு சொன்னேனோ அதைத்தான் அவர்களுக்கும் விளங்கப்படுத்தினேன். ஆனால் இங்குள்ளவர்களோ தங்களுக்கு இருந்த சமூக அங்கீகாரத்தில் களைகளை பிடுங்க வேண்டும் என்று நெல்லுக்குள் - வயலுக்குள் - இறங்காமல் வரப்பில் நின்றே பேசிக் கொண்டார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மாத்திரமல்ல, எல்லா இயக்கத்தினரும் எதிர்ப் புரட்சிக்காரன், சமூக விரோதி என்று தாம் எண்ணுபவர்களை அல்லது இயக்கத்திற்கு விசுவாசம் இல்லை என்று கருதுபவர்களை எல்லாம் அழித்து நிர்மூலமாக்கி விடுதலையே என்ற கொள்கையால் நியாயப்படுத்தினார்கள். இதுதான், ஆயிரமாயிரம் தேச பக்தர்களையும், சமூக உணர்வு படைத்தவர்களையும் தமிழ் மக்களிடையே கொன்றொழித்தது. மற்றவர் எமது இனத்தை கொன்றல்ல, எமக்குள்ளேயே கட்டுக்கடங்காது, சமூக நெறிமுறைகளைப் பின்பற்றாது, இனத்திற்கு உள்ளேயே கொலைகளைச் செய்தால், அதுவும் இனப்படுகொலைதான். அதனை மறந்து மற்றவர்கள் மேல் பழி போடுகிறோம்.

**123. இவை கூட இனப்படுகொலை என்று கருதுகிறீர்களா?**

அப்படியல்லாது வேறு எதுவாக இவை இருக்க முடியும்? தமிழ் மக்களின் விடுதலை இயக்கங்களினாலேயே கொல்லப்பட்ட தமிழ் மக்களைக் கணக்கெடுத்து பார்த்தால் அவை எவ்வளவு என்று தெரியும். நாம் அவற்றைத் தற்போது மூடை கட்டி அப்பால் தள்ளிவிட்டு இயக்க மோதல்களில் அல்லது ‘விடுதலைக்காக’ ஏற்பட்டவை என்று காட்டி மீளாராயவே தயாராக இல்லாமல் இருக்கிறோம். அவற்றினால் நடந்த அழிப்புக்களைக் கணக்கெடுத்திருக்கிறோமா? எல்லாமே, விடுதலைக்கென்றும் அதற்கான விலை என்றும் ஒவ்வொருவரின் மனசாட்சிக்கெதிராகவும் நியாயப்படுத்தப்பட்டன. நாங்கள் பரம்பரை பரம்பரையாக கட்டிக்காத்த சமூக நீதிகளுக்குள் இப்படியான தான்தோன்றித்தனமான கொலைகள் அடக்கப்படவில்லை. ஓர் ஆயுத கலாசாரத்தில் இவை திணிக்கப்பட்டன. ஆனால் அதற்கு சமூக அங்கீகாரங்கள் இருந்தன எனக் காட்டப்பட்டது.

இப்படியான ஒன்றுதான் கம்போடியாவில் நடந்தது. பின்னர் கம்போடிய அரசின் ஏற்பாட்டில் ஐ.நாவின் அனுசரணையில் ஏற்படுத்தப்பட்ட கம்போடிய அசாதாரண நீதிமன்றங்களால் அந்த அழிவுகளை நடத்திய பொல் பொட்டும் அவரது சகாக்களும் தண்



டிக்கப்பட்டனர். கம்போடிய அரச குடும்பத்திற்கு எதிராக கம்போடிய மக்கள் கிளர்ந்தெழுந்து கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு போராடினார்கள். அதற்கு அயல் நாட்டில் இருந்த வியட்கொங் அதரவளித்தது. அரச குடும்பத்தினருக்கு அமெரிக்காவுடன் அதனது நேச நாடுகள் உதவி செய்தன. ஆனாலும் அரச குடும்பம் தோற்றுப்போக ஹெமர்ரோஜ் என்ற அமைப்பு பதவியேற்றது. இதன் தலைவராக (சகோதரன் நம்பர் ஒன்று) பொல்பொட் இருந்தார். இவர் பிரான்ஸில் படித்தவர். கம்யூனிஸ் சித்தாந்தங்களில் ஆர்வம் கொண்டவர். ஸ்டாலினதும் மாவோவினதும் தத்துவங்களின் அடிப்படையிலும் கம்போடியாவில் ஒரு சமுதாய சீர்திருத்தத்தை கொண்டு வர வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தனர். அதற்காகக் கம்போடிய மக்கள் எல்லோருக்கும் எதிராகவே அட்டூழியங்கள் நடத்தப்பட்டன. படித்தவர்கள், பணக்காரர்கள், பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டு சித்திரவதைக்கு ஆளாகி இறந்தார்கள். பின்னர் கம்போடியாவில் மதப்பற்றாளர்கள், பலவீனத்தில் இருந்த இனச்சிறுபான்மையில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் என்று ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டார்கள். அந்தச் சமுதாய சீர்திருத்த அமைப்பு எத்தனையோ பேரைக் கொன்றது. கிட்டத்தட்ட ஒன்றரையிலிருந்து மூன்று கோடி வரை மக்கள் அழிந்தனர் என கணக்கெடுக்கப்பட்டனர்.

பின்னர் வியட்நாம் கம்போடியாவிற்குள் பிரவேசித்தது. இனப்படுகொலையை நிறுத்தி நாட்டை ஜனநாயக வழிக்கு கொண்டு வந்தது.

பொல் பொட்டுக்குச் சீனாவின் ஆதரவு ஐ.நாவில் இருந்ததால் வியட்நாமின் நடவடிக்கைகளை சீனா எதிர்த்தது. வியட்நாம் கம்போடியாவிற்குள் பிரவேசித்த போதும், பொல்பொட்டின் ஆதரவாளர்கள் நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் இயங்குவதற்கு பல வருடங்களுக்கு சீனா ஆதரவு கொடுத்தது. ஐ.நாவில் பொல் பொட்டின் நியமனங்களையே ஆதரித்தது.

மஹிந்த ராஜபக்ஷவும் தான் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டுள்ள மக்களை மீட்கவே போரிட்டேன் என்று சொல்வதின் தாற்பரியமும் சீனாவின் அணுகுமுறையும் புரியலாம்.

**124. விடுதலை அமைப்புக்களின் இந்த மனோபாவத்திற்கு எவை காரணமாகலாம்?**

மாணவர் பேரவையில் இருந்து படிப்படியாக விடுதலை என்றும் ஆயுதப்போராட்டம் என்றும் புறப்பட்டவர்கள் யாவருமே இளைஞர்கள். தமது இனத்திற்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றே சித்தாந்தத்தை உருப்போட்டவர்கள். அவர்களில் மிகவும் இளைஞராக பிரபாகரனும் ஒரு கட்டமைப்பான இராணுவ அமைப்பை உருவாக்கி கொள்வதை பற்றியே சிந்தித்தார். அவர்கள் மக்களின் அங்கீகாரத்திலிருந்து ஏற்பட்ட ஓர் அமைப்பிலிருந்து புறப்பட்டவர்கள் அல்லர். அவர்களது தொடக்க நாள்களில் அவர்கள் தமது போராளித் தோழர்களும் தாமுமே மக்கள் எனக் கருதினர். அவர்கள் பாதுகாக்கப்படுவதே முக்கியம். அதிலிருந்து வெளியிலிருப்போரோ, விலகிச் செல்ல நினைப்பவரோ, யாராகவும் இருக்கலாம், அவர்களால் தமது இயக்கத்திற்கு இடைஞ்சல் வருமெனக் கருதப்பட்டால் அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தம் அங்கீகரிக்கப்பட்டு அமுல் படுத்தப்பட்டது. இவ்வாறு தலைகீழாக ஆரம்பித்த அவர்களது அரசியல் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தவோ அல்லது அவற்றை அவர்களுடன் விவாதித்து அரசியல் குறித்து புத்திமதி தரவோ அவர்களுடன் யாரும் இருக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு அவர்கள் தொடக்கத்தில் செய்த கொலைகள் எல்லாம் நியாயமாகத் தெரிந்தன. அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஒருவரால் அவர்களது இரகசியங்கள், இருப்பிடங்கள் காட்டிக் கொடுக்கப்படுமானால் தாம் இலட்சியமாகக் கொண்ட தமிழீழம் சிதைக்கப்படும் என்றே எல்லோரும் சிந்தித்தார்கள். ஆகவே படிப்படியாக வளர்ந்து தாம் இலட்சியமாகக் கொண்ட தமிழீழத்திற்கு இடைஞ்சலாக வரும் எதுவும் சிதைக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக எதையும் நடைமுறைப்படுத்தலாம் என்றும் சிந்தனை வளர்ந்தது. இராணுவத் தாக்குதல்களால் கிடைத்த வெற்றிகளையும் அரச படைகளின் இழப்புக்களையும் மட்டுமே வைத்துக் கொண்டு தாங்கள் அபரிதமாக வளர்ச்சி அடைந்து விட்டனர் எனப் பெருமிதப்பட்டார்கள். தங்கள் பொடியங்களும் வளர்ந்து விட்டார்கள் என தமிழ் மக்களும் எண்ணினார்கள்.

(வளரும் ......)

# வடகடல் அன்னையின் நீதி அலைவகள்

**வடக்குக் கடலில் பழைய பஸ் 'பொடி'களை இறக்குவது தொடர்பான விவகாரம் இலங்கை - இந்திய மீனவர்களிடையேயான முரண்பாடுகளை மேலும் தீவிரமடையச் செய்யும் ஏது நிலைகளை ஏற்படுத்தியுள்ள சூழலில் அவ்விடயத்தை ஒட்டிய சட்ட விடயங்களை ஆராய்கின்றது இக்கட்டுரை.**


சட்டத்தரணி
ஜெகநாதன் தற்பரன்
(சட்டமுதுமாணி)

கடல் நீருக்கு அடியில் செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்ற கற்பாறைகள், அல்லது தூய்மையாக்கப்பட்டு, கடலில் பறிக்கப்பட்டு, ஒரு நிலத்தடிப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டு, கடலடியில் மூழ்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்ற உபகரண தொகுதிகள் குறித்த செய்தி இலங்கையின் வடக்கே அதிகம் பேசப்படும் விடயமாக உள்ளது.

பல்வேறு நாடுகளும் இத்தகைய செயற்பாடுகளை நாடுகளுக்கு இடையே அல்லது நாட்டினுள் குறித்த விடயம் தொடர்பான ஒரு நெறிமுறை சட்டங்களின் தொகுப்பு அல்லது வழிகாட்டி கோவை மூலமாகவே நடைமுறைப்படுத்தியிருந்தன.

இலங்கையின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் - குறிப்பாக கடற் சுழியோடிகள், உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பு அல்லது கடல் நீர் அடியில் ஒரு நூதனசாலையினை உருவாக்கி சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் ஓர் இடமாக மாற்றும் நன்நோக்கு என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை. அத்துடன் உலோகக் கழிவகற்றல் செயற்பாட்டிற்கு பாரிய ஒரு பங்களிப்பை வழங்கும் அதேவேளை கடல் வழிக் கடத்தல்காரர்களின் செயல்பாடுகளை முறியடிக்கவும் துணை நிற்கும் என்பதுவும் கண்கூடு.

ஆயினும் இத்தகைய செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையற்ற போக்கினை கொண்டிருந்தமையும் பல்வேறு ஊடகங்களின் ஈடுபாடின்றி, ஆய்வுகள் - ஆராய்ச்சிகள் இன்றி மிகவும் வேகமாகவும், அவசர அவசரமாகவும் செய்யப்பட்டதன் சூட்சுமம் என்ன? - இது குறித்தும் அறிந்து கொள்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலையில், இத்தகைய விரைவுச் செயற்பாடுகள் அதிக விசனத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆதலினால், சிறந்த தெளிவைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு வெளிக்கொணர்தல் என்பதுவே இக்கட்டுரையை வெளியிடுவதன் காரணம்.

### அண்மித்த காலப்பதிவு ஆய்வு அறிக்கை

2020 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு இடம்பெற்ற சமயத்தில் கடல்வழி பயணங்கள் மற்றும் போக்குவரத்து தொடர்பான மதிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இவ் அறிக்கையிடலில் கடல் நீருக்கு அடியில் செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்ற பாறைகள் மற்றும் அத்தகு தொகுதிகள் வழி, கடல் பயணங்களிற்கு பாரிய பொருள் செலவினை ஏற்படுத்துவனவாகவும், பயண வழித்தடங்களைக் கேள்விக்குறியாக்குவனவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



கடல் நீருக்கு அடியில் செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்ற கற்பாறைகள், அல்லது தூய்மையாக்கப்பட்டு, கடலில் பறிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்படும் உபகரண தொகுதிகள் பொதுவாக உலகளாவிய ரீதியில் பல்வேறு சிக்கல்களையே தோற்றுவிக்கின்றன என்றிருந்தது.

கடல் பிராந்தியங்கள் தொடர்பான விளக்கம் தொடர்பில், 1976 ஆம் ஆண்டின் 22ஆம் இலங்கை அரசாங்கத்தின் சட்ட மூலத்தின் பிரிவு இரண்டின் படி நீர் பகுதிக்குள் மேற்படி கலன்கள் அல்லது கனமான பொருள்களை கடல் பகுதிக்குள் இலங்கை ஆழ்கடல் பகுதியில் விடப்பட்டு இருந்தாலும் கூட, சர்வதேச பயணம் மற்றும் சுற்றுலா பயணிகள் - குறிப்பாக கடல் பயணங்களில் - சங்கடங்களை ஏற்படுத்த வல்லவையாக இவை எதிர்காலத்தில் காணப்படக் கூடும். சூழலில் கழிவு முகாமைத்துவத்தினைத் திறம்படச் செய்வதற்கு (வினைத்திறனான பொருள்செலவில் செய்வதற்கு) இத்தகைய செயற்பாடுகள் உதவினாலும், மீன் வளர்ப்பு அல்லது மீன்பிடி என்று வருகின்ற போது இத்தகைய செயற்பாடுகள் அதிகளவு சாதகமான விளைவுகளை கொண்டிருந்தன என எவ்வித உதாரணங்களும் எடுத்துக் காட்டவில்லை.




### உலகப் படிப்பினைகள்

அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் காணப்பட்ட கைவிடப்பட்ட நிலையில் இருந்த ரயில் பெட்டிகள் மற்றும் பஸ் வண்டிகள் மற்றும் கார்கள் என ஏறத்தாழ 2,200 வாகனங்கள் கடல் அடிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்றும் , அதனூடாக நியூயோர்க் நகர சபை கணிசமான அளவு வருவாயைப் பெற்றது என்றும் 2000 ஆண்டின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்ற போதும், அதே அரசாங்கங்கள் குறித்த உலோகத்தினால் ஏற்பட்ட கடல் மாசுபாடு மற்றும் குறித்த உலோகத்தின் பாதிப்பு குறித்தும் அதிருப்தி வெளியிட்டிருந்தன.

அத்துடன் சர்வதேச நியதிகளுக்கு அமைவாக, தொகுதியினை கடல்சார் வளப்பாதிப்பு இல்லாது செய்கின்ற உறுதி வழங்கல் செய்ததன் பின்பு, அத்தகைய பொருள்களை மீளவும் எடுத்துச் செல்லப்பட்டு விடப்பட அனுமதித்தன. அத்தகைய செயற்பாடுகளினால் மட்டுமே அதனை நியூயோர்க் மாநிலத்தின் சட்ட ரீதியாகவும் செய்ய முடிந்தது. இதுகுறித்து நெறிமுறைகள் தெளிவாக எழுதப்பட்டிருந்தன. இத்தகைய தரமான செயற்பாடுகளினால் வருகின்ற சட்டச் சிக்கல்கள் குறித்தும் அதன் ஊடாக ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அங்கு போதியளவு ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த திட்டம் அனுமதிக்கப்பட்டிருந்தது.

### இலங்கையின் சட்டம்

இலங்கை அரசானது ஐக்கிய நாடுகள் கடல்சார் சமவாயத்தினை 1982ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி ஏற்றுக்கொண்டு 19ஆம் திகதி ஜூலை மாதம் 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதாக ஒப்புதல் அளித்திருந்தது. இதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் கூட்டு ஒப்பந்தத்தின் வழி இணைந்த செயற்பாடு (குறிப்பாக தெற்காசிய நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளுடன்) போன்ற பல்வேறு கடப்பாடுகளை திணிக்கும் கடப்பாடுகளாக் கொண்டு செயற்படுவதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ளது. இலங்கை சர்வதேச பொருத்தனைகளை ஏற்றுக் கொண்ட வகையில், மீன் மற்றும் கடல் வளங்கள் குறித்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மாகாண அரசாங்கங்களும் அமைச்சுக்களும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களும் பெரும் பங்கினை வகிக்கின்றன.

கடல் மண்டலம் சட்டமூலத்தின் (1976) பிரிவு 2,3,4 மற்றும் பிரிவு 5 உட்பிரிவிற்கு அமைவாக குறித்த கடல்நீர்ப்பகுதி இலங்கை அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற, பொருளாதாரக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, வெளிநாடுகளுக்கு பாதிப்பில்லாத கடல்சார் பகுதியில் நடந்ததாகக் கருதுகின்ற போதும் சர்வதேச கப்பல்கள் அல்லது சர்வதேச பயணங்கள் நாட்டு எல்லை பரப்பின் ஊடாக பயணிக்கும் போது இத்தகைய செயற்பாடுகள் சர்வதேச பயணங்களுக்குத் தடையாக அமைந்து விடக் கூடிய ஏதுநிலை காணப்படுகிறது. அத்துடன், இலங்கையில் உயர் கடல் மீன் வள மேலாண்மை தொடர்பான விதிமுறைகள் பற்றிய விவரங்கள் மீன் வள மற்றும் நீர்வளச் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் ஒருங்கமைவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மீன் வளங்கள் மற்றும் நீர்வாழ்வின் கீழ் மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான சட்டம் நீர்வாழ் மீன் வளங்கள் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் விவரிக்கின்றது.

குறித்த - செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்ற - செயற்பாடுகள் கடல் மீன்வள செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்படுமாயின், இத்தகு செயற்பாடுகளுடன் தொடர்புபடும் மீன்பிடி சட்டம் (அனைத்து திருத்தங்களுடனானது - 2015) மற்றும் ஒழுங்கு விதிகள் குறித்த விவரங்கள் கணிசமான அளவில் ஒப்பு நோக்கப்படுதல் வேண்டும். இவை சுருக்கமாக இங்கு தரப்பட்டுள்ளன. அத்துடன், சமகாலத்தில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் குறித்த சட்டத்தின் 61 ஆவது பிரிவின் பல்வேறு சட்ட வலிதினை கேள்விக்குரியதாக்கியிருக்கின்றது. அவற்றில் முதன்மையானவை கீழ் அட்டவணையில் உள்ளன:-

(08 பக்கம் பார்க்க)

| வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் | ஒழுங்கு விதிகள் | சட்டத்தின் பிரிவுகள் (ஆங்கில பிரதி) மற்றும் தடைகள் |
|---|---|---|
| 1763/36 | சுறா பிடிப்பதற்கான (அருகிடும்) விதிமுறைகள் - நன்னடத்தை | பிரிவு 61 - இது பிரிவு 29 பகுதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வாசிக்கப்படல் வேண்டும். மற்றும் பிரிவு 49. |
| 1878/11 | மீன் பிடிப்பு தரவு சேகரிப்பு விதிமுறைகள் | பிரிவு 61 (1) i, m மற்றும் s மற்றும் பிரிவு 49. |
| 1878/12 | உயர் கடல் மீன்பிடி செயற்பாடு குறித்த விதிமுறைகள் | பிரிவு 61 (1) t - இது பிரிவு 14 a-n பகுதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வாசிக்கப்படல் வேண்டும். மற்றும் பிரிவு 49. |
| 1842/41 | உயர் கடல் மீன்பிடி செயற்பாடு குறித்த விதிமுறைகள் -திருத்தம் | |
| 1904/10 | மீன்பிடி (கியர்) குறிக்கும் விதிமுறைகள் | பிரிவு 61 (1) h மற்றும் பிரிவு 49. |
| 1907/47 | படகுகளுக்கான கப்பல் கண்காணிப்பு அலகு (உயர் கடல்களில் இயங்கும் அமல்படுத்துவதற்கான) கட்டுப்பாடு | பிரிவு 61 (1), sg, sh, t மற்றும் பிரிவு 49. |
| LDB 1/2012/ II | அரச துறைமுக அளவீட்டு விதிமுறைகள் | பிரிவு 61 (1) i, t மற்றும் பிரிவு 49. |

# கொவிட் இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் யாழ். நாவற்குழியில் திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம் – நாவற்குழி கொரோனா இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் நேற்று (செவ்வாய்கிழமை) வைபவ ரீதியாகம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான நெல் களஞ்சியத்தில் தற்போது யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றாளர்களை பராமரிக்கவென 200 கட்டில்களுடன் தயார்ப்படுத்தப்பட்டுள்ள குறித்த இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் நேற்று யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மற்றும் அரச அதிபரால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட கட்டளைத் தளபதி, யாழ் மாவட்ட மக்களின் செயற்பாடுகளாலேயே யாழில் தொற்று அதிகரித்ததாக யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் நாவற்குழி கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலத்தை விட தற்பொழுது தொற்று அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலே சில ஆலயங்களில் சுகாதாரப்பிரிவினரின் கட்டுப்பாடுகளை மீறி ஆலய உற்சவங்கள் நடத்தப்பட்டமையாலேயே தொற்றுநிலைமை அதிகரித்தது.

தற்போதும் சில இடங்களில் திருமண நிகழ்வுகள் வீடுகளில் சுகாதாரப் பிரிவின் அனுமதி இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பயணத்தடை என்பது மக்களைத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவே. எனவே பொது மக்கள் இந்த பயணத்தடைக் காலத்திலாவது சுகாதாரப் பிரிவினரின் கட்டுப்பாடுகளுடன் வீடுகளில் இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்கவென சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்திருக்கின்றோம். அதாவது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரிவினர் மற்றும் நமது இராணுவத்தினரின் முயற்சியின் பயனாக இந்த இடைக்கால சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த சிகிச்சை நிலையத்தில் 200 கட்டில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் தொற்றை இல்லாதொழிக்க உதவ முன்வரவண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வடகடல் அன்னையின்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகு செயற்பாடுகள் பிற தொடர்புறு செயற்பாடுகளுக்கு விஸ்தரிக்கப்படின் இங்கு தரப்பட்டுள்ள விவரங்களும் மீள் ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

### பிற சிக்கல்கள்

கடல் பாதை வழியே செல்கின்றன கப்பல்களின் பாதைகள் தடுக்கப்படவும் அல்லது அத்தகைய கப்பல்களின் பாதைகளில் தடங்கல்கள் ஏற்படுத்தப்படவும் கூடும். பயணத் தடைக்கு ஏற்படுகின்ற இழப்புகளை செலுத்தக்கூடிய ஏது நிலைமைகளில் நாடுகள் காணப்படுதல் வேண்டும். அத்துடன் கடற் பயணங்களில் தடைகள் விடப்படுவது சர்வதேச நியதிகளின் கீழ் முரணான ஏற்பாடாகவும் அமைந்துவிடும்.

சர்வதேச கடல் எல்லைகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் ஏற்படுத்தப்படுகின்ற இத்தகைய விநோதமான செயற்பாடுகள் எதிர்காலத்தில் பூகோள ரீதியில் இலங்கையின் கடல் எல்லைப் பரப்புகளில் உள்ள சிக்கல்களை மேலும் சட்டச் சிக்கல்களுக்கு உண்டு பண்ணிவிடும். அதனால் இந்த நடவடிக்கையினால் ஏற்படப் போகும் விளைவுகள் சாதகமானவையாக மட்டும் இருக்கும் என்று கொள்ள முடியாது. கடல் சார் சூழலியலாளர்கள் கூறுவதுபோல கடல் அடித்தளத்தின் அதிகம் பாதிக்கப்படுகின்ற தன்மை சாதகமான விளைவுகளை மட்டும் கொண்டு இருக்கும் என்றும் கூற முடியாது.

ஆதலினால், உலோகங்களின் அளவு, உக்கலடையும் தன்மை கடல் அடித்தளத்தில் விடப்படும் இடத்தின் விவரத்திரட்டு, பிராந்திய நாடுகளுடன் கூட்டு உடன்படிக்கைகள் ஊடான கடல்வள பாதுகாப்பு ஆகிய விடயங்களில் உலக நாடுகள் பலவும் பின்பற்றப்படுகின்ற முறைகளின் ஊடாக மட்டும் கண்காணிப்பது அவசியமானதாகப்படுகின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் நாம் சூழல் சம்பந்தமான சுற்றுலா தளமாக நமது கடல் வளத்தை பயன்படுத்த போகின்றோமாக இருந்தால் – குறிப்பாக சுற்றுலாத்தளமாக நாங்கள் மாற்றப்போவதாக இருந்தால் – அதற்கான ஏற்பாடுகளில் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. அண்மைக் காலங்களில் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற கடல் பிரதேசங்களில் அந்நிய நிறுவனங்களின் பங்கு கொள்ளுகை அல்லது அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் சம்பந்தமான பல்வேறு வியாக்கியானங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், இத்தகைய செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பல கேள்விகளை உருவாக்கியுள்ளன.

இத்தகைய செயற்பாடுகளை முன்நின்று செய்வதற்கு ஓர் அதிகார சபை அல்லது ஓர் அதிகாரம் மிக்க ஓர் அரச தரப்பு உள்ளூரில் இருத்தல் அவசியம். குறித்த ஆராய்ச்சி அல்லது ஆய்வினை செய்து, அதன் விளைவுகளை அலசி ஆராய்ந்து செயல்படுத்தப்பட்டிருப்பின் இத்தகைய செயற்பாடுகள் வரவேற்கத்தக்கவையே. இத்தகைய செயற்பாடுகளை செய்வதற்கு நாடாளுமன்றத்தில் அல்லது உள்ளூராட்சி நிர்வாகத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள், சட்ட நெறிமுறைகள், சட்டத் தகவல்கள் அல்லது அத்தகைய செயற்பாடுகளை கொண்டிருக்கக் கூடிய ஒரு சட்ட ஆவணம் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

குறிப்பாக, இத்தகைய கடல் வளம் அருகி வருகின்ற மீன் இனங்களை பாதுகாப்பதற்காகவோ அல்லது மீன் இனப்பெருக்கத்திற்கு உதவி செய்யும் என்பதாக வைத்துக் கொள்வோமானால் அத்தகைய மீன்களின் உற்பத்தியின் பலன் யாரிடம் சென்றடையப் போகின்றது? அத்தகைய மீன்களை பிடித்து அதனை உணவு பதனிடுதல் தொடர்பான உற்பத்தி செய்கின்ற கைங்கரியங்களை செய்யப் போகின்ற நிறுவனங்கள் யாவை? அவை குறித்த அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே அத்தகைய முன்னுரிமைகள் வழங்கப்படுமா? அல்லது ஏனைய நிறுவனங்களுக்கும் மக்கள் அமைப்புகளுக்கும் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அத்தகைய சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமா? இவை பலரிடம் காணப்படுகின்ற வினாக்களாக இருக்கின்றன. விடை அறிதல் அவசியமானது.

ஏககாலத்து சட்டம், இத்தகைய செயல்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்கும் கையாள்வதற்கும் உள்ளூரில் ஒரு கட்டமைப்பு அல்லது அதிகாரம் மிக்க உருவக அமைப்பு, அது அரசின் அமைப்பாக செயற்படுவதற்கும், அத்தகைய செயற்படு சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதற்குரிய நிலைகள் சமகாலத்தில் உருவாக்கப்படுதல் என்பதுவும் அவசியமாகின்றது.

# பிளாஸ்டிக் போத்தல் தடை நடைமுறைச் சாத்தியமற்றது

750 மில்லி லீற்றர் பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சி செய்வதற்கான மாற்றுத் திட்டத்தை முன்மொழியுமாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்களுக்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும் அறிவித்துள்ளார்.

மாற்று பொதியிடலுக்கான செலவு மற்றும் ஆயுள் காலம் தொடர்பில் கவனம் செலுத்தும் போது பிளாஸ்டிக் போத்தல்களைத் தடை செய்வது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

750 மில்லி லீற்றர் போத்தலை வாங்கும் அந்த போத்தலின் மீள் சுழற்சிக்காக ஒரு தொகைப் பணம் வைப்பீடு ரீதியில் வைத்துக்கொள்ள ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றுப் போத்தலை மீள ஒப்படைப்பதன் மூலம் வைப்புத் தொகையைத் திருப்பிப்பெற முடியும் என்றும், வெற்றுப் போத்தலை அப்புறப்படுத்தினாலும், மற்றொரு நபர் அத்தகைய போத்தல்களைச் சேகரித்து ஒப்படைப்பதன் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் சுட்டிக் காட்டியுள்ளது..

அது தொடர்பில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள வைப்புத்தொகை ரூ .10.00 தொடர்பான ஆலோசனைக்கு நிறுவனங்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை கட்டுப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சு பல உற்பத்திகளை கடந்த காலங்களில் தடை செய்தது. அதேபோல் மேலும் பல உற்பத்திகளை எதிர்காலத்தில் தடை செய்ய எதிர்பார்த்து உள்ளது. இவற்றைத் தடை செய்வதற்கு பிரதான காரணம் சுற்றாடலுக்கு உகந்த வகையில் மாற்று உற்பத்திகளை மேற்கொள்ள முடிகின்ற போதிலும் அவ்வாறான உற்பத்திகளை மேற்கொள்ளாமையே ஆகும்.

# எரிபொருள் விலை ஏற்றம் தொடர்பாக அமைச்சரவையில் விவாதிக்கவில்லை



எரிபொருள் விலை தொடர்பாக நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே வெகுஜன ஊடக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதி கட்டுப்பாட்டில் மேற்கொள்ள வேண்டியவை

- பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதியில் கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை நியமித்தல் அதன் முலம் கண்காணித்தல்.
- பொதியிடல் தேவைகளுக்காக நிலையங்களை அமைக்கும் போது அவை சட்டத்திற்கு அமைவாக இயங்குகின்றனவா என்பதை ஆய்வு செய்து அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க முடியும்.
- லேபிளிங் செய்யும் போது உள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.
- விளம்பரம் செய்வது தொடர்பான சட்டங்களை, ஒழுங்குகளை வெளிப்படுத்த வேண்டும்.
- போக்குவரத்து மற்றும் கொண்டு செல்லல் ஒழுங்கு முறைகளை வழிநடத்த வேண்டும்.
- களஞ்சியங்களில் , விற்பனை நிலையங்களில் சேமிப்பது தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அறுவடைக்கு முந்தைய இடைவெளிகளில் இரசாயனப்பாவனை பற்றிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்.
- இரசாயனப்பாவனையில் எஞ்சிய விற்பனையாகாத காலஞ்சென்ற இரசாயனங்களை அழித்தல் அகற்றுதல் தொடர்பாக முடிவுகள் எடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்.
- பூச்சிக்கொல்லிகள் லேபிள்களுக்கு ஏற்ப பயன்படுத்தப்படும்போது பூச்சி கட்டுப்பாட்டின் நோக்கத்திற்காக பயனுள்ளதாகவும் திறமையாகவும் இருக்கும் என்பதையும், இயற்கை சூழலை ஏற்றுக்கொள்ள முடியாத அபாயங்களுக்கு உட்படுத்தாது என்பதையும் இரசாயனம் பாவிக்கப்பட்ட உணவினை நுகர்வோருக்கு ஆபத்து இல்லை என்பதை உறுதி செய்வதே பதிவின் நோக்கம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தியில் எந்தப் பிளவும் கிடையாது

## சரத் பொன்சேகா



ஐக்கிய மக்கள் சக்தியில் எவ்வித பிளவுகளும் கிடையாது என கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் உறுப்பினர்களுக்கு மத்தியில் எவ்வித முரண்பாட்டு நிலைமைகளும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலவி வரும் பிரச்சினைகளைத் திசை திருப்பும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் பிளவு என அரசாங்கம்பிரசாரம்செய்துவருவதாகக்குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும், சம்பிக்க ரணவக்கவிற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

எனினும் இவ்வாறான எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொவிட் வைரஸின் மற்றுமொரு புதிய மாறுபாடு கண்டுபிடிப்பு

### வெளியாகியுள்ள தகவல்

உலக நாடுகளுக்கு கொவிட் தொற்று பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில், தற்போது கொவிட் வைரஸின் மற்றுமொரு புதிய மாறுபாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொவிட் தொற்றின் டெல்டா மாறுபாடு தற்போது மேலும் திரிவடைந்து புதிய டெல்டா பிளஸ் வகையாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேகமாகப் பரவும் தன்மையுள்ள டெல்டா வகை சார்ந்த 'சார்ஸ் கொரோனா வைரஸ் 2 மேலும் உரு மாறி, 'டெல்டா பிளஸ்' ஆக மாறியுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய புதிய மாற்றம், சார்ஸ் – கொரோனா வைரஸ் 2இன் கூர்முனை புரதத்தில் ஏற்பட்டுள்ளதாகவும், அது மனித செல்களில் நுழையவும், பாதிப்பை ஏற்படுத்தவும் இந்தப் புதுவகை வைரஸுக்கு உதவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் உள்ள மரபியல் மற்றும் ஒருங்கிணை உயிரியல் நிறுவன விஞ்ஞானி விநோத் ஸ்காரியா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கொவிட் வைரஸின் டெல்டா, கப்பா, அல்பா, பீட்டா மற்றும் கம்மா ஆகிய மாறுபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது டெல்டா பிளஸ் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிப்பு

பாண் தவிர்ந்த அனைத்து வகையான பேக்கரி பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன



என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் மாளுபாண், பனிஸ் உட்பட அனைத்து பேக்கரி வகை பொருள்களும் 5 ரூபா முதல் 10 ரூபா வரை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நயினாதீவு கடற்கரை ஓரத்தில் மருத்துவக் கழிவுகள் ஒதுக்கம்



நயினாதீவு தெற்கு கடற்கரையில் மருத்துவக் கழிவுகள் கரை ஒதுங்குவதால் மக்கள் இடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

இவை இந்திய மருத்துவக் கழிவுகளா என்ற குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. வெற்று ஊசிகள், மாத்திரைகள் உள்ளிட்டவையே இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் நயினாதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கடமை நிமித்தம் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றமையால் சம்பவம் தொடர்பில் இன்று (புதன்கிழமை) விசாரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## நடிகையின் மகள் மீது தாக்கு: முடியை வெட்டி எடுத்த பெண்

பாணந்துறை, கெஸெல்வத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள அழகு கலை நிலையத்தின் உரிமையாளரான பெண் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அவரது தலைமுடியையும் வெட்டியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பெண்ணுடன் தொடர்பில் இருந்த நபரின் மனைவி மற்றும் மேலும் 2 பெண்களால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண், பிரபல நடிகையின் மகள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு தாக்குதல் மேற்கொண்ட பெண்கள் மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பயணக் கட்டுப்பாட்டை மீறினர் என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## முகத்தை மறைத்து அணியும் கண்ணாடி கவசத்தை பரிந்துரைக்கவில்லை என்கிறது சுகாதாரப் பணியகம்

கொவிட் – 19 வைரஸில் இருந்து பாதுகாப்பை பெற, முகக்கவசத்துக்கு மாற்றீடாக, முகத்தை மறைத்து அணியும் கண்ணாடிக் கவசத்தை அணிய பரிந்துரைக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அது பொருத்தமானது அல்ல என்று இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. நீர்த்துளிகள் நேரடியாக முகத்தில் இறங்குவதைத் தடுக்கும் பொருட்டு ஒருவர் கண்ணாடி முகக்கவசம் அணிவது பொருத்தமானது.

தும்மல் மற்றும் இருமல் ஆகியவற்றிலிருந்தும் அது பாதுகாப்பை வழங்குகிறது. 'இருப்பினும், மற்றவர்களின் சுவாச துளிகளை தடுப்பதில் இருந்து அது ஒருவரைப் பாதுகாக்காது என்று அந்தப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே முழுப் பாதுகாப்பைப் பெற முகக்கவசத்தை அணிவது மிகவும் பொருத்தமானது. மேலும், கொவிட் – 19 இலிருந்து மக்களை முகக்கவசம் மட்டும் பாதுகாக்காது என்பதால், முகக் கவசங்கள் மட்டும் அணிவதை நம்ப வேண்டாம் என்றும் பணியகம் வலியுறுத்தியது.

பெரிய கூட்டங்களைத் தவிர்ப்பது மற்றும் சமூக தூரத்தை பராமரிப்பது மிக முக்கியமானது என்று இலங்கை சுகாதாரப் மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

## 16 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீளவும் மக்கள் சக்தியிலிருந்து ஐ.தே.கவுக்கு தாவல்!



ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு ஆதரவளித்து வந்த உள்ளூராட்சி சபைகளை சேர்ந்த 16 உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டனர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கம்பளை, கண்டி, உடபலாத்த ஆகிய உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களே இவ்வாறு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.

கம்பளை நகர சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.

இவ்வாறு கட்சியில் மீண்டும் இணைந்துகொண்ட உறுப்பினர்கள் பகிரங்கமான செய்தியாளர் சந்திப்பை நடத்தி, தமது தீர்மானம் தொடர்பாகத் தெளிவுபடுத்த உள்ளனர் எனவும் ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த பலர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விண்ணப்பித்துள்ளனர் எனவும் இவர்களின் கோரிக்கையைத் தற்போது ஆராய்ந்து வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 06 | கணிதம் | அலகு 09

**செயலட்டை - 1 விடை**

1. $\frac{2}{7}, \frac{4}{15}, \frac{3}{4}$

2. $\frac{1}{3}, \frac{1}{7}, \frac{1}{17}$

3.
1. $\frac{6}{16}, \frac{9}{24}$
2. $\frac{8}{14}, \frac{12}{21}$
3. $\frac{10}{18}, \frac{15}{27}$
4. $\frac{4}{6}, \frac{6}{9}$
5. $\frac{8}{10}, \frac{12}{15}$

4.
1. $\frac{6}{10}, \frac{3}{5}$
2. $\frac{12}{20}, \frac{6}{10}$
3. $\frac{6}{18}, \frac{3}{9}$
4. $\frac{12}{15}, \frac{4}{5}$
5. $\frac{6}{9}, \frac{2}{3}$

---

1. $\frac{2}{7} < \frac{2}{5}$
2. $\frac{5}{14} > \frac{3}{14}$
3. $\frac{6}{13} < \frac{9}{13}$
4. $\frac{7}{25} > \frac{7}{32}$
5. $\frac{9}{50} < \frac{17}{50}$
6. $\frac{4}{7} > \frac{5}{14}$
7. $\frac{3}{8} < \frac{13}{24}$
8. $\frac{5}{12} = \frac{15}{36}$
9. $\frac{4}{5} > \frac{1}{7}$
10. $\frac{3}{8} < \frac{2}{5}$

ஆக்கம் - திரு. சற்குணராசா செந்தூரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
(யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் -
திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாள
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 9 | நேர்விகித சமன் | கணிதம் அலகு 10

1.
- இரண்டு கணியங்களுக்கு இடையிலான தொடர்பை குறிப்பது விகிதம் ஆகும்.
- இரு கணியங்களும் ஒரே மடங்கால் அதிகரித்தல், ஒரே மடங்கால் குறைதல் நேர்விகித சமனாகும்.

1.ஒரே மடங்கால் அதிகரித்தல்
- 5:7
  இரு கணியங்களையும் இரண்டால் பெருக்குக
  10:14
- 5:7
  இரு கணியங்களையும் மூன்றால் பெருக்குக.
  15:21

2.ஒரே மடங்கால் குறைதல்
- 30:50
  இரு கணியங்களையும் இரண்டால் வகுக்குக
  15:25
- 30:50
  இரு கணியங்களையும் பத்தால் வகுக்குக
  3:5

1.2:5 இந்த இரு கணியத்தை இரண்டால், ஆறால் பெருக்குக?

.........................................................................

2.15:45 இந்த இரு கணியத்தை மூன்றால், ஐந்தால் வகுக்குக?

.........................................................................

3.6:9 இந்த இரு கணியத்தை ஒன்பதால் பெருக்குக, மூன்றால் வகுக்குக?

.........................................................................

**2.அலகு முறையைப் பயன்படுத்தி நேர்விகித சமன்பாடுகள் தொடர்பான பிரசினங்களைத் தீர்த்தல்**

அலகு ஒன்றின் பெறுமானத்தைக் காண்பதன்மூலம் பிரசினங்களைத் தீர்க்கும் முறை அலகு முறை எனப்படும்.

உ+ம் 5 பென்சிலின் விலை ரூபாய் 50.00 ஆகும். 8 பென்சிலின் விலை யாது?
5:50
அலகு ஒன்றின் பெறுமானத்தைக் காண்பதற்கு இரு கணியங்களையும் ஐந்தால் வகுக்குக
1:10
8 பென்சிலின் விலையை காண்பதற்கு இரு கணியங்களையும் எட்டால் பெருக்குக
8:80
8 பென்சிலின் விலை ரூபாய் 80.00 ஆகும்.

9 கொப்பியின் விலை ரூ540.00 எனின். 7 கொப்பியின் விலை யாது?
9:540
அலகு ஒன்றின் பெறுமானத்தைக் காண்பதற்கு இரு கணியங்களையும் ஒன்பதால் வகுக்குக
1:60
7 கொப்பியின் விலையை காண்பதற்கு இரு கணியங்களையும் ஏழால் பெருக்குக
7:420

1.7 பேனாவின் விலை ரூபா 350.00 எனின். 5 பேனாவின் விலை யாது?

.........................................................................

2.3kg சீனியின் விலை ரூபா 165.00 எனின். 4kg சீனியின் விலை யாது?

.........................................................................

3.8 தேங்காயின் விலை ரூபா 640.00 எனின். 5 தேங்காயின் விலை யாது?

.........................................................................

4.6l மண்ணெண்ணெயின் விலை ரூபா 270.00 எனின். 4l மண்ணெண்ணெயின் விலை யாது?

.........................................................................

**3.அட்சரகணித முறையில் எழுதி நேர்விகித சமன்பாடுகள் தொடர்பான பிரசினங்களை தீர்த்தல்**

உங்களுடைய தொலைபேசியில் பேசுவதற்கு ஏற்படும் செலவு a ஆனது நீங்கள் அதனை உபயோகிக்கும் நேரம் t க்கு நேர்விகித சமனானது.

எனவே $a \propto t$

ஒரு குறிப்பிட்ட பெறுமதி k க்கு நேரத்தையும் செலவையும் தொடர்புபடுத்தி ஒரு வாய்பாடு அமைக்கலாம்.

$a = kt$

6 நிமிடம் தொலைபேசியில் பேச ரூபா 12.00 செலவாயின் உரிய பெறுமதிகளை

$a = kt$ என்ற சமன்பாட்டில் பிரதியிட்டு

$a = k \times 6$

$\frac{12}{6} = k$ எனப் பெறலாம்.

$2 = k$

எனவே, செலவை a (ரூபா)யிலும் நேரத்தை t (நிமிடத்திலும்) தொடர்புபடுத்தும் சமன்பாடு $a = 2t$ ஆகும்.

உ+ம் ஒரு புகையிரதம் ஆனது d நேரத்தை கடக்க செலவிட்ட நேரம் t க்கு நேர்விகித சமனானது.

$d \propto t$

$d = k \times t$

$d = kt$

புகையிரதம் 24m தூரத்தை கடக்க செலவிட்ட நேரம் 6 செக்கன் ஆயின்

$d = k\,t$

$24 = k\,6$

$\frac{24}{6} = k$

$4 = k$

எனவே புகையிரதம் d (m) தூரத்தை கடக்க செலவிட்ட நேரம் t (s) க்கான சமன்பாடு $d = 4t$ ஆகும்.

புகையிரதம் 9 செக்கனில் கடந்த தூரம் யாது?

$d = 4t$

$d = 4 \times 9$

$d = 36m$

புகையிரதம் 9s ல் 36m தூரத்தை கடந்து சென்றது

புகையிரதம் 60m கடக்க செலவிட்ட நேரம் யாது?

$d = 4t$

$\frac{60}{4}$ t

t - 15s

புகையிரதம் 60m கடக்க செலவிட்ட நேரம் 15s ஆகும்.

**4.இப்பிரசினங்களை அட்சரகணிதச் சமன்பாட்டு முறையைப் பயன்படுத்தித் தீர்க்க**

01.ஒரு பேருந்து 45m தூரத்தை கடக்க எடுத்த நேரம் 9s எடுத்தது எனின்

1. dm தூரத்தை கடக்க எடுக்கும் நேரம் ts எடுத்தது எனின் அதற்கான அட்சரகணிதச் சமன்பாட்டை உருவாக்குக?

.........................................................................

2.12s இல் பேருந்து அடைந்த தூரத்தை அட்சரகணிதச் சமன்பாட்டின் மூலம் காண்க?

.........................................................................

3.80m தூரத்தை பேருந்து கடக்க எடுத்த நேரத்தை அட்சரகணிதச் சமன்பாட்டின் மூலம் காண்க?

.........................................................................

02.15kg மாவின் விலை ரூபா 2250.00 எனின்

1. akg மாவின் விலை ரூபா r எனின் அதற்கான அட்சரகணிதச் சமன்பாட்டை உருவாக்குக?

.........................................................................

2. 9kg மாவின் விலையினை அட்சரகணிதச் சமன்பாட்டின் மூலம் காண்க?

.........................................................................

3.ரூபா 750.00 க்கு வாங்க கூடிய அளவை அட்சரகணிதச் சமன்பாட்டின் மூலம் காண்க?

.........................................................................

**5.வெளிநாட்டு நாணயங்கள்**

ஒவ்வொரு நாடும் தத்தமது சொந்த நாணய அலகுகளை வைத்திருக்கின்றன.

உ+ம்: இலங்கை – ரூபா, பிரித்தானியா – பவுண், ஜேர்மனி – யூரோ

| நாடு | வெளிநாட்டு நாணய அலகு | நாணயமாற்று விகிதம் (இலங்கை ரூ.) |
|---|---|---|
| அமெரிக்கா | அமெரிக்க டொலர் | 151.20 |
| இங்கிலாந்து | ஸ்ரேலிங் பவுண் | 185.90 |
| ஐரோப்பா | யூரோ | 160.60 |
| ஜப்பான் | யென் | 1.33 |
| இந்தியா | இந்திய ரூபாய் | 2.26 |
| சவுதி அரேபியா | சவுதி ரியால் | 40.32 |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் டொலர் | 107.30 |

(2017 - 03 - 05 இணையத்தளத்திலிருந்து பெறப்பட்டது)

உ+ம்

அமெரிக்க டொலர் ஒன்றின் நாணயமாற்று விகிதம் ரூ. 151.00 ஆக இருந்த ஒரு நாளில் 60 அமெரிக்க டொலர்களை இலங்கை ரூபாயாக மாற்றிய ஒருவர் பெற்ற பணத்தொகை இலங்கை ரூபாயில் எவ்வளவு?

1 அமெரிக்க டொலரின் பெறுமதி = ரூ. 151.00
60 டொலரின் பெறுமானம் = ரூ.151 X 60
= ரூ. 9060.00

சவுதி ரியால் ஒன்றின் நாணயமாற்று விகிதம் ரூ. 40.00 ஆக இருந்த ஒரு நாளில் 40000 ரியாலில் உள்ள தனது சம்பளத்தை இலங்கை ரூபாயாக மாற்றிய ஒருவர் பெற்ற பணத்தொகை இலங்கை ரூபாயில் எவ்வளவு?

1 சவுதி ரியாலின் பெறுமதி = ரூ. 40.00
40000 ரியாலின் பெறுமானம் = 40 X 40000
= ரூ. 1600000.00

1.இலங்கைக்கு வந்துள்ள இங்கிலாந்து பயணி ஒருவர் ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் நாணயமாற்று விகிதம் ரூ. 180.00 ஆக இருந்த போது 150 ஸ்ரேலிங் பவுணை இலங்கை ரூபாயாக மாற்றிய பயணி பெற்ற பணத்தொகை இலங்கை ரூபாயில் எவ்வளவு?

.........................................................................

2.ஐரோப்பாவில் இயங்கும் கம்பனியில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் யூரோ ஒன்றின் நாணயமாற்று விகிதம் ரூ. 160.00 ஆக இருந்த போது இலங்கையிலுள்ள தனது மனைவிக்கு 500 யூரோவினை அனுப்பினார் எனின் மனைவி பெற்ற பணத்தொகையினை இலங்கை ரூபாயில் எவ்வளவு?

.........................................................................

3.இந்தியா சென்றுள்ள இலங்கைப் பயணி ஒருவர் இந்திய ரூபாய் ஒன்றின் நாணயமாற்று விகிதம் ரூ. 2.00 ஆக இருந்த ஒரு நாளில் இலங்கை ரூ. 50000 இணை இந்திய ரூபாயாக மாற்றிய அப் பயணி பெற்ற பணத்தொகை இந்திய ரூபாயில் எவ்வளவு?

.........................................................................

4.ஜப்பான் சென்றுள்ள இலங்கை வீராங்கனை ஒருவர் யென் ஒன்றின் நாணய மாற்று விகிதம் ரூ. 1.50 ஆக இருந்த ஒரு நாளில் இலங்கை ரூ. 750000 இணை யென்னாக மாற்றிய அவ் வீராங்கனை பெற்ற பணத்தொகை யெனில் எவ்வளவு?

.........................................................................

ஆக்கம் - திரு. சற்குணராசா செந்தூரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
( யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் -
திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

# ஊர்காவற்துறையில் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய 30 அடி நீளமான திமிங்கிலம்



(ந.லோகதயாளன்)

யாழ்., ஊர்காவற்றுறைக் கடற்பகுதியில் இன்று அதிகாலை உயிரிழந்த நிலையில் 30 அடி நீள திமிங்கிலம் கரை ஒதுங்கியது.

குறித்த திமிங்கிலம் உயிரிழந்தமைக்கான கரணத்தைக் கண்டறியும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட குழு வினரும் சம்பவ இடத்துக்கு நேரில் பயணித்து ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில்‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தையடுத்து கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் பல்வேறு இடங்களில் கரை ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயணக் கட்டுப்பாடு நீக்கமா? சனி அல்லது ஞாயிறு முடிவு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



எதிர்வரும் 21ஆம் திகதியன்று பயணக் கட்டுப்பாட்டை நீக்குவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் சனி (19) அல்லது ஞாயிறுக் கிழமை (20) தீர்மானிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்று வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 21ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பு. ஆனால், அது பற்றி தற்போதே முடிவெடுக்க முடியாது. அனைத்துக் காரணிகள் பற்றியும் ஆராய வேண்டும். அந்தவகையில் எதிர்வரும் 19 அல்லது 20ஆம் திகதியளவில் தீர்மானம் எடுக்கப்படும் - என் றார்.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின்

# தமிழ்ப் பொறுப்பதிகாரியாக மேனகா மூக்காண்டி நியமனம்



சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி மேனகா மூக்காண்டி, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி மேனகா மூக்காண்டி, இலங்கை இதழியல் கல்லூரியில், துறைசார் கல்வியைக் கற்றவராவார்.

15 வருட கால தனது ஊடக வாழ்வில் ஊடகவியலாளராகவும் செய்தி ஆசிரிய ராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக திருமதி மேனகா மூக்காண்டி நியமனம் பெறுவதற்கு முன்னர் ‘தமிழ்மிரர்’ பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

# அதிகளவானோர் நேற்றுமாட்டினர்!

## இதுவரை 33,949 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் ஆயிரத்து 356 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதன்படி கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை அந்தச் சட் டத்தை மீறிய குற்றச்சாட்டில் 33 ஆயிர த் து 949 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@ gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

# வவுனியா நகர சபைத் தலைவர் கைதாகி பிணையில் விடுவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா நகர சபைத் தலைவர் இ. கௌதமன், இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அண்மையில், வவுனியா நகரில் அமைந்துள்ள வாடி வீடு வளாகத்துக்கு விஜயம் செய்த நகர சபைத் தலைவர், அதற்கு சீல் வைத்திருந்தார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியருடன் நகர சபைத் தலைவர் முரண்பட்டார் எனத் தெரிவித்து, வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டது.

இதையடுத்து இன்று நகர சபைத் தலைவர் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடு விக்கப்பட்டார்.